## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் - 2017

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை முன்னேற்றும் சட்டத்தின் vii ஆம் பகுதியின் 40 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2018 மே 14 ஆம் திகதி நிறுவகத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவதம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ் அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இந் நிதிக்கூற்றுக்களானவை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமனங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

(i) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களில் ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டமையினால் ரூபா 561,756,774 தொகை கிரயத்தையுடைய நிலையான சொத்துக்கள் முற்றாக பெறுமானத்தேய்வு செய்திருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தபட்டுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நியமத்தின் 72 ஆம் பந்தியின் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒன்றிற்கு ஒன்று வேறுபடுத்தக்கூடிய சொத்துக்கள் என்றமையால் வெவ்வேறாக கணக்கீடு செய்ய வேண்டும். அவ்வாறாயினும் நிறுவனத்தினால் மாலபே இல் அமைந்துள்ள ரூபா 40,000,000 தொகை பெறுமதியான ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கட்டிடம் அமைந்துள்ள காணி, கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்து மீளாய்வாண்டிற்காக ரூபா 2,000,000 பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09

நியமத்தின் 35 ஆம் பிரிவின் பிரகாரம் இறுதி பண்ட இருப்பின் பெறுமதி முன் வந்து முன் செல்லல் முறை அல்லது அநுகூலமாகச் சராசரி முறை ஆகிய கிரய முறைகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்பட வேண்டுமெனினும் நிறுவகம் அம் முறைகளை கடைபிடிக்காமல் இலகு சராசரி கிரயத்தின் மீது இறுதி பண்ட இருப்பின் பெறுமதியினை கணக்கீடு செய்திருந்தது.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விஞ்ஞான, தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் இராஜாங்க அமைச்சி அலுவலகம் மற்றும் தொழில்நுட்பம் சார் சாட்டுதல்கள் அலகு பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகக் கட்டிடத்தில் நடாத்திச் செல்வதற்காக மாதாந்தம் வாடகையாக ரூபா 1,368,050 செலுத்துவதற்கு உடன்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2017 ஜூன் 01 திகதி முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை 07 மாத காலத்திற்கான ரூபா 9,576,350 தொகை நிறுவகத்திற்கு கிடைக்க வேண்டியிருந்த போதிலும் பெறவேண்டிய வாடகை ரூபா 8,200,300 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் பெறவேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,376,050 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டமொன்று உடன்பட்டுள்ளவாறு செயற்படுத்தாமையினால் ஏற்பட்டிருந்த நட்டத்தை கணக்கு தீர்ப்பதற்காக 2014 ஆண்டின் போது பணிப்பாளர் சபையினால் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு திருப்பி செலுத்துவதற்கு தீர்மானித்திருந்த தொகையில் மேலும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 12,300,860 தொகைக்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 15(ஏ) இன் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொள்வனவு செய்தல் முற்பணம் (உள்நாட்டு) மீதி ரூபா 3,456,439 தொகை எனினும் நிதி நிலைமைக்கூற்றில் அம்மீதி ரூபா 3,209,274 தொகை ஆகக் காணப்பட்டமையால் ரூபா 247,165 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக்கூற்றில் கடன்பட்டோர் மீதி ரூபா 16,534,423 தொகை எனினும் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் அம்மீதி ரூபா 16,528,839 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 5,584 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) 2018 மார்ச் 31 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்த வருடாந்த பண்ட கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொறித்தொகுதிகள் உபகரணங்கள் கணினி அறை உபகரணங்கள், தளபாடங்கள் பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் கணினிகள் மற்றும் துணைக்கருவிகள் என்பவற்றின் பெறுமதிகள் முறையே ரூபா 1,058,322,445 , ரூபா 81,819,207 தொகை மற்றும் ரூபா 73,299,744 தொகை ஆகும். சமர்பிக்கப்பட்டிருந்த நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் அச்சொத்துக்களின் கிரயம் முறையே ரூபா 1,127,303,844, ரூபா 84,900,135 தொகை மற்றும் ரூபா 67,049,915 தொகை ஆக காணப்பட்டது. இதன் காரணமாக வருடாந்த பண்டக் கணிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள பெறுமதியை விட ரூபா 65,812,498 தொகை மிகையாக நிதி நிலைமைக்கூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், நடைமுறை அல்லாத சொத்துகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 4,512,574 தொகை கிரயம் பெறுமையை கொண்ட ஏனைய சொத்துக்கள் வருடாந்த பண்டக் கணபீட்டு அறிக்கையில் உட்படுத்தியிருக்கவில்லை.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல வருட காலமாக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட வெளிநாட்டு புலமை பரிசில் உடன்படிக்கைகளில் நிபந்தனைகளை மீறிய 18 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 7,810,032 தொகை 2017 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் சேவையை விட்டு சென்றிருந்த மற்றும் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய சம்பளம் என 2009 ஆண்டின் போது ரூபா 6,845,135 இற்கான ஒதுக்கம் ஒன்று செய்யப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 திகதி அளவில் அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2009 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள அட்டுறு செலவுகள் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 793,919 தொகை மீளாய்வாண்டின் போது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்து காணப்பட்ட ரூபா 2,858,744 இற்கான 9 கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்தவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான தொழில்நுட்பத்தை முன்னேற்றும் சுற்றறிக்கையின் பிரிவு 19(2) | நிறுவனத்தின் முகாமைத்துவ சபை, 09 அங்கத்தவர்களை கொண்டிருக்க வேண்டுமெனினும் 2017 அக்டோபர் 03 திகதி அளவில் முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்கள் 08 பேரை மாத்திரம் கொண்டிருந்தது. |
| (ஆ) | 2000 ஜனவரி 19 திகதிய 380 இலக்க பொது நிதிச் சுற்றுநிருவத்தின் பிரிவு 7.1 | மதிஉரை சேவை வருமானத்தில் நேரடி கிரயத்தை கழித்த பின்னர் 10 சதவீதம் முதல் 25 சதவீதம் வரை ஆன தொகையொன்று நிறுவகத்தினால் தடுத்து வைக்கப்பட்டு மீதித் தொகை திறைசேரியின் விஷேட நிதியம் ஒன்றிற்கு 03 மாதங்களுக்கு ஒருமுறை அனுப்பப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 4.2.5 | நிறுவகத்தின் தொழிற்படு மூலதன முகாமைத்துவ முறைமை ஆக்கபூர்வமானதா என மீளாய்வு செய்தவற்காக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு அறிக்கை, இருப்பு ஆயுள் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் இனங்காணப்பட்ட பழமையான, மெதுவாக அசையும் மற்றும் காலவதியான இருப்புக்கள் தொடர்பாக அறிக்கை அனைத்து மாதாந்த முகாமைத்துவ சபை கூட்டடங்களிலும் சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2011 ஏப்ரல் 21 திகதிய எம்ஒஎப்பீ/டீஆர்டீ/2011/01 இலக்க கொண்ட நிதி மற்றும் திட்டமிடல் சுற்றறிக்கை | வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்திற்கு அறிவிக்காமல் 2015 ஆண்டின் போது ரூபா 2,443,833 தொகை பெறுமதியான கொரியா செயற்திட்டமொன்று மற்றும் 2013 ஆண்டின் போது ரூபா 9,471,966 தொகை பெறுமதியான இந்து ஸ்ரீ லங்கா செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2016 ஜனவரி 08 ஆம் திகதிய 1/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக ஒப்பந்த அடிப்படையில் 13 ஊழியர்கள் மற்றும் தொழிற்கூறு அடிப்படையில் 64 ஊழியர்களுக்குமான மீளாய்வாண்டின் போது சம்பளமாக ரூபா 17,882,181 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்கம் கொண்ட பொதுநிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டு தொடர்பாக பௌதீக இருப்புக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2006 ஏப்ரல் 10 ஆம் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்களச் சுற்றறிக்கை | வெற்றிடமாக காணப்படும் பதவிகளில் மேவகை செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் 14 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 4,508,341 இற்கான பற்றாக் குறை ஒன்றாக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 56,290,243 தொகையாக காணப்பட்டமையினால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 60,798,584 இற்கான வீழ்ச்சி ஒன்றினை காட்டியது. ஊழியர் ஊதியம் மற்றும் உடன்பட்ட சேவைகளின் செலவுகள் முறையே ரூபா 48,297,921 இனால் மற்றும் ரூபா 15,426,297 இனால் அதிகரித்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கியமாக காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 39,177,699 தொகையாக காணப்பட்ட மிகை தளம்பளுடன் 2016 ஆண்டில் ரூபா 56,290,243 இற்கான மிகையொன்றினை காட்டிய போதிலும், 2017 ஆண்டில் ரூபா 4,508,341 இற்கான வீழ்ச்சி ஒன்றாக மாறியுள்ளது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் நடைமுறை அல்லாது

சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் வரி மீண்டும் சீராக்கல் செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 365,884,413 தொகையாக காணப்பட்ட பங்களிப்பு இடையராமல் வளர்ச்சியடைந்து 2017 ஆண்டின் போது ரூபா 496,796,412 தொகை காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கணிக்கப்பட்ட தொழிற்படு மூலதன விகிதாசாரங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதாசாரம் | 2017 ஆண்டு | 2016 ஆண்டு |
|---|---|---|
| நடைமுறை | 2.28:1 | 6.76:1 |
| விரைவு | 2.24:1 | 6.67:1 |

2016 ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆண்டின் போது நடைமுறை மற்றும் விரைவு விதங்கள் முறையே 66.27 சதவீதத்தினால் மற்றும் 66.41 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நடைமுறை சொத்துக்கள் ரூபா 204,227,710 இனால் அதாவது 159 சதவீதத்தினால் அதிகரித்தல் இதற்காக காரணமாக உள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

மீளாய்வாண்டின் போது தயாரித்திருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றப்பட்டதென இனங்காணக்கூடிய விதமாக முன்னேற்ற மீளாய்வு அறிக்கை தயாரித்திருக்காமையால் இலக்காகிய திட்டம் மற்றும் நிறுவகத்தின் முன்னேற்றத்தினை ஒப்பீடு செய்ய இயலாதுள்ளன.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தரப்படுத்தப்பட்ட சேவை வருமானத்தில் அடங்கும் தொழில்நுட்ப பரிசோதனைகளுக்காக நிறுவகத்திற்கு சமர்பிக்கப்படும். மாதிரிகள் உரிய தினத்தில் வாடிக்கையாளர்களுக்காக பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிப்பட்டது. இது தொடர்பாக 2017 ஆகஸ்ட் மாதத்தினை அடிப்படையாக வைத்து நடாத்திய தெரிவு பரிசோதனையின் போது 23 சந்தர்ப்பங்களில் 02 நாட்கள் முதல் 32 நாட்கள் வரை காலதாமதத்துடன் அறிக்கைகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) நிறுவனத்தில் காணப்படும் ஈடீஎல், ஆர்என்டீ, எப்டீஎஸ் மற்றும் எம்டீஎஸ் (ETL,R&D,FTS,HTS/MTS) ஆய்வு கூடங்களில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் அறிக்கைகள் வழங்கும் திகதிகள் நிறுவகத்தினால் முன்னறே தீர்மானித்திருக்கவில்லை. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 2017 ஆகஸ்ட் மாதத்தில் 14 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 03 பரிசோதனை அறிக்கைகள் 2017 அக்டோபர் 17 திகதி அளவிலும் வழங்கியிருக்கவில்லை.

(இ) நிறுவனத்தினால் பல்வேறு நிறுவனங்களுக்கு ஆலோசனை சேவைகள் வழங்கும் போது அவ்வறிக்கை உரிய தினத்தில் வழங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாக 2017 மார்ச் மாதத்தை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது 9 சந்தர்ப்பங்களில் 7 சந்தர்ப்பங்களின் போது 20 நாட்கள் முதல் 94 நாட்கள் வரை தாமத்துடன் அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்த 2 சந்தர்ப்பங்களில் 2017 அக்தோபர் 10 திகதி அளவிலும் அவ் அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவனத்தினால் கூட்டுத்தொகை ரூபா 6,705,607 தொகை பெறுமதியான புலோரஸன்ட் ரிஸேட் மைகிரோஸ்கோப் வித் பேஸ் கண்டிராஸ்ட் ஒப்ஜெக்டிவ்ஸ் (Finorent Reasearch Microscope with phase contract objectives) உபகரணங்கள் மற்றும் இன்கியுபெடர் வித் ஒப்டிகல் ஷேகர் உபகரணம், ஒன்று உதிரிப்பாகங்களுடன் கொள்வனவு செய்வதற்காக முறையே 01 வருடம் 02 மாதங்கள் 14 நாட்கள் மற்றும் 01 வருடம் 06 மாதங்கள் மற்றும் 07 நாட்கள் காலம் செலவிடப்பட்டிருந்த காரணத்தினால் குறிப்பிட்ட உபகரணங்ளினால் பயன்படுத்த மேற்கொள்வதற்கு எதிர்பார்த்த கருமங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததென அவதானிக்கப்பட்டன.

(உ) Cry/2A/Elisa Kit உபகரணம் 2016 ஆகஸ்ட் 29 திகதி கட்டளை அனுப்பப்பட்டு ரூபா 83,804 தொகை செலுத்தியிருந்த போதிலும் வழங்குனரினால் உபகரணங்களுக்காக விதந்துரைக்கக்கூடிய குறைந்த உஷ்ண மட்டத்தினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் அதனை பயன்படுத்த முடியாதுள்ளது. இதன் பிரகாரம், பண்டத்தை கொள்வனவு செய்வதற்காக நிறுவகத்தினால் செலவிடப்பட்ட ரூபா 83,804 தொகை பயனற்ற செலவு ஒன்றாக மாறியிருந்ததுடன், அது மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 2020 ஆண்டளவில் நிறுவனத்தை நடாத்துவதற்காக நிறுவகத்தின் ஊடாகவே சுயமாக நிதியம் உருவாக்கி கொள்ளல் மற்றும் 2017 ஆண்டின் போது நிறுவகத்தின் வருமானம் 26 சதவீதத்தினால் அதாவது, ரூபா 62 மில்லியனினால் அதிகரிக்கும் நோக்குடன் நிறுவனத்தில் தற்போது காணப்படும் அலுவல்களை ஆய்வு செய்து அவ் இலக்குகளுக்கு நெருங்குவதற்காக திட்டங்கள் தயாரிப்பதற்காக 2016 ஜூன் 01 திகதி முதல் 07 மாதங்களுக்காக ரூபா 1,340,500 தொகை செலவிடப்பட்டு விற்பனவு மேம்படுத்தல் ஆலோசகர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், அறிக்கை திகதி அளவிலும் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றிக் கொள்ளல் தொடர்பாக எதுவித கருமமும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 2017 ஆண்டின் போது 7 சதவீதத்தினால் வருமானம் அதிகரித்திருந்தது.

## 4.3 பதவியணியனர் நிருவாகம்

2017 திசெம்பர் 31 திகதி நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 392 மற்றும் உள்ளவாறான பதவியணியின் 317 ஆக காணப்பட்டதால் 96 வெற்றிடங்களும் 07 மிகைகளும் காணப்பட்டன.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறை ஆண்டின் போது நிறைவேற்றுத் தர மட்டத்தில் 70 வெற்றிடங்களும், நிறைவேற்று அல்லாத தரம் 16 வெற்றிடங்களும் ஏனைய பதவியணி 10 வெற்றிடங்களும் காணப்பட்டன. வெற்றிடமாக காணப்பட்ட 05 பதவியணிகளில் 06 உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக சேர்ப்பதற்காக 2017 ஆகஸ்ட் 20 திகதி செய்தித்தாள் அறிவித்தல் வெளியிட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி வரை குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெற்றிடமாக காணப்படும் பதவிகளின் அலுவல்களை மேவகை செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் 14 பேர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2006 ஏப்ரல் 10 திகதி 28 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு புறம்பாக நிறைவேற்றுத் தரத்தை சேர்ந்த சிரேஷ்ட நிருவாக உத்தியோகத்தர் பதவி ஒன்றிற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பதவியணியில் 02 உதவியாளர் பதவிகளுக்காக 03 உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர். மேலும், முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த எண்ணிக்கையை மிகைத்து ஒருவர் நியமன செய்யப்பட்டிருந்தன.

### 4.4 நிதியப் பயன்பாடு

ரூபா 1,101,625 இற்கான 3 வங்கிக் கணக்கு மீதிகள் செயற்படா வங்கிக் கணக்குகள் என 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் பேணப்பட்டிருந்ததுடன், அந்த பணத்தை உரிய கருமங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்குவதற்காக தயாராகும் போது ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த தொடர்பு ஒன்று காணப்படாமையால் இலக்கான குறிக்கோள்களை நோக்கி நெருங்குவதற்கு திட்டங்கள் தயாரிப்பதற்கு மற்றும் முற்தயாராகும் செயற்பாடு மிகவும் மெதுவாக பலவீன மட்டத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

## 6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படாத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) வழிகாட்டல் 4.1.1(இ) இற்கு முரணாக மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் ரூபா 7,721,841 தொகை பெறுமதியான டயல்டோ மீற்றர் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. டயல்டோ மீற்றர் கொள்வனவு செய்வதற்காக விலைகூறல்கள் அழைக்கும் ஆவணங்களில் தெளிவான நியமக் குறியீடுகள் காட்டப்பட்டமையால் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினர் குறைந்த விலை கூறவிலைகள் சமர்பிக்கப்பட்டிருந்த வாடிக்கையாளர்களுடன் கலந்துரையாடாமல் கூடிய விலை சமர்பித்திருந்த வழங்குனரிடம் குறிப்பிட்ட உபகரணங்களை கொள்வனவு செய்தமையால் நிறுவகத்திற்கு ரூபா 2,226,015 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ii) வழிகாட்டல் 6.2.2 பிரகாரம் சர்வதேச போட்டி விலைகூறல் அடிப்படையில் கூறுவிலைகள் சமர்ப்பிப்பதற்காக குறைந்த பட்சம் 42 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் எனினும், நிறுவகத்திற்கு ஸ்டெக் எயார் கொலிடி மொணிடரின் முறைமையொன்று கொள்வனவு செய்வதற்காக விலைகூறல் சமர்ப்பிப்பதற்காக 26 நாட்கள் மாத்திரம் வழங்கியதன் மூலம் கூறுவிலை சமர்பிக்கும் போட்டித் தன்மை குறைந்திருந்தது. மேலும், வழிகாட்டல் 4.2.2(அ) பிரகாரம் பெறுகைகள் நேரசூசி ஒன்று தயாரித்திருக்காததுடன் கொள்வனவு செய்வதற்காக 455 நாட்கள் கால தாமதம் ஏற்பட்டிருந்தது.

(iii) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(அ) பிரிவின் பிரகாரம் ரூபா 500,000 தொகையினை மிகைக்கும் சேவை ஒப்பந்தங்களுக்காக முறையான உடன்படிக்கையொன்று ஒப்பந்தக்காரருடன் கையொப்பமிடப்படவேண்டும். எனினும், பாதுகாப்பு சேவை, உடல் ஆரோக்கிய சேவை மற்றும் வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெறுவதற்காக உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் அந்த சேவைகளுக்காக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 28,947,912 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) 2016 ஆண்டிற்காக பெறுகை திட்டத்தின் பிரகாரம் ரூபா 107,545,000 பெறுமதியான நடைமுறை அல்லாத சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் அந்த ஆண்டில் ரூபா 23,070,230 தொகை பெறுமதியான சொத்துக்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது மொத்த தொகையில் 21 சதவீதம் மாத்திரமே. 2017 செப்டம்பர் 30 திகதி வரை 2016 திட்டமிடப்பட்ட பெறுகைக் காலம் ரூபா 32,946,770 தொகை பெறுமதியான சொத்துக்கள் தொகையொன்று மாத்திரம் கொள்வனவு செய்திருந்தது. 2017 பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது ரூபா 63,685,835 தொகை பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி வரை அவற்றில் ரூபா 17,000,000 தொகை பெறுமதியான சொத்துக்கள் தொகையொன்று மாத்திரம் 27 சதவீதம் வரை கொள்வனவு செய்திருந்தது. இதன் பிரகாரம் பெறுகை திட்டத்தை கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

**6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக மதிப்பீட்டுச் செலவு மற்றும் உள்ளவாறான செலவு இடையே 5 சதவீதம் முதல் 63 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**6.3 உள்ளகக் கணக்காய்வு**

2014 அக்தோபர் 01 திகதி முதல் வெற்றிடமாக காணப்படும் பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**7 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கணக்குப் பதிவுக்காக நிறுவனத்தில் செயற்படுத்தும் கணினி நிகழ்ச்சித் திட்டங்கள் குறைகளுடன் காணப்பட்டமை |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) பௌதீக மெய்மையாதல் மேற்கொள்ளப்படல். |
| | | (ii) குறை பயன்பாட்டுச் சொத்துக்கள் காணப்படாமை. |
| (இ) | மனித வள முகாமைத்துவம் | வெற்றிடங்கள் காணப்படல் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையில் இருந்து விளகியிருத்தல் அவதானிக்கப்படல். |
| (ஈ) | பாதீட்டு கட்டுப்பாடு | பாதீட்டு எண்ணிக்கைகள் மற்றும் உள்ளவாறான எண்ணிக்கை இடையே பொருண்மையான முரண்கள் காணப்படல். |
| (உ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் விதப்புரைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை மற்றும் உள்ளகக் கணக்காய்வு பிரிவில் காணப்படும் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்காமை. |
| (ஊ) | செயற்பாட்டு நிருவாகம் | மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்கள் குறிப்பிட்ட காலத்தில் பூர்த்தி செய்யபடாமை மற்றும் எதிர்பார்த்த பெறுபேறுகளை நெருங்கியிருக்காமை. |
| (எ) | பெறுகைகள் | பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளில் கவனம் செலுத்தாமல் நடவடிக்கை எடுத்தல். |